மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அரசின் நிபந்தனைகளை நிர்வாகத்தினர் நிறைவேற்றாத தால் அக்கல்லூரியை அரசு ஏற்று நடத்த இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

* 301 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், தேனி நகரத்தில் "அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி" துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை. ஐந்து இலட்ச ரூபாய் நிதி திரட்டி, மற்ற நிபந்தனைகளும் நிறைவேற்றப் பட்டால், இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

* 302 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் அரசினர் ஆண்கள் கல்லூரி ஒன்றினைத் துவக்கிட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரத்திற்குப் பக்கத்தில் ஏ.வி.சி. என்ற தனியார் கல்லூரி இருக்கிறது. அரசாங்கம் அதற்கு லட்சக்கணக்கான ரூபாய் மானியம் தருகிறது என்றாலும் அந்தக் கல்லூரியில் எவ்வளவு அதிக மார்க்குகள் வாங்கியிருந்தாலும் கூட வன்னிய குலத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்ந்துக்கொள்ள மறுத்து வருகிறார்கள். அதுபற்றி, பல தடவை இந்த மன்றத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கேயுள்ள வன்னியகுல மாணவர்களின் நலனைக் கருதியாவது தனியாகவே ஒரு அரசுக் கல்லூரியை அங்கே நிறுவ முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் குறிப்பிட்டபடி இப்போது அதற்கான உத்தேசம் இல்லை. மாயூரத்திலேயே ஒரு கல்லூரி இருக்கிறது. அங்கிருந்து பத்து மைலுக்குள்